**ரிதிமாலியத்த பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 16 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதுவைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய நிர்மாண வேலை தடுத்து வைத்தல் பணம் ரூபா 55,000 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் பொறுப்புக்கள் அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த சுற்றாடல்சார் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 29,000 தொகை எதிர்காலக் கொடுப்பனவு என கணக்கீடு செய்திருந்தமையால் அப் பெறுமதி ஆண்டிற்கான வருமானம் குறைவாகவும் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 2,314,120 தொகை எனினும், பொது வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 2,977,828 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 663,708 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) கடந்த ஆண்டின் 04 இருப்பு மீதிகள் மீளாய்வாண்டிற்கு முன்கொண்டு வந்த போது ரூபா 203,212 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 22,427,066 தொகைக்கான கணக்கு மீதியில் 03 வருட காலம் கடந்துள்ள நிலுவை மூலதன உதவி ரூபா 22,251,036 தொகை ஒரு வருடம் கடந்துள்ள வியாபார வரி ரூபா 3,450 தொகை 03 வருட காலம் கடந்துள்ள கடை வாடகை ரூபா 172,580 தொகையினை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 26,573,008 தொகைக்கான செலுத்த வேண்டிய மீதியில் நான்கு வருட காலம் கடந்துள்ள செலவினக் கடன்கொடுத்தோர் ரூபா 251,475 தொகை 03 வருடங்களை கடந்துள்ள நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 22,564,668 தொகை மற்றும் 02 வருட காலம் கடந்துள்ள கடன்கொடுத்தோர் ரூபா 3,756,865 தொகைக்கான மீதிகளை தீர்த்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 71,492,372 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் | | |
| (i) பிரிவு 132(ஒ) | 95,925 | அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி சபைக்கு சொந்தமான பெக்கோ லோடர் நலனோம்பல் சங்கம் ஒன்றிற்கு வாடகை மற்றும் எரிபொருள் இன்றி 41.7 மணித்தியாளங்கள் சேவைக்காக வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 158,159 | 757,410 | சபைச் செயலாளரின் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| | | | வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை<br>------------------------------------------------ | | |
| (i) | விதி 214 | | வருடாந்தம் களஞ்சியப் பொருட்கள் கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 218 | | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் பரிசோதனை செய்து ஆவணப்படுத்தியிருக்க வில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | |
| (i) | xxiv அத்தியாயம் 1.6 ஆம் பிரிவு | 25,173 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 5 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய 1996 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ஊழியர் கடன்களை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(3) | | பெக்கோ இயந்திரத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதி அளவினது முழுமையான அறிக்கையொன்று சமர்பித்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | | இழப்புக்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 133 | | மீளாய்வாண்டிற்காக உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571 | 24,468 | 02 வருடங்கள் காலங் கடந்துள்ள 4 வைப்பு மீதிகளை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி 2016 திசெம்பர் 30 திகதிய இலக்கம் 2000(iv)(ஆ) பகுதி | அபிவிருத்தி செய்யப்படாத ஒவ்வொரு காணிகளிலும் இருந்து ஒரு சதவீத வருடாந்த வரி ஒன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான காணிகளை இனங்காண் பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 5,096,770 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,020,808 தொகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 332,676 | 336,768 | 336,768 | -- | 177,240 | 254,238 | 254,238 | -- |
| (ii) வாடகை | 5,425,951 | 5,596,690 | 5,596,690 | -- | 5,219,600 | 5,219,600 | 4,108,636 | 1,110,964 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 719,000 | 751,125 | 751,125 | -- | 624,000 | 758,150 | 758,150 | -- |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 1,045,600 | 1,045,600 | 591,092 | 454,508 | 650,100 | 704,298 | 704,298 | -- |
| மொத்தம் | 7,753,227 | 7,730,183 | 7,275,675 | 454,508 | 6,670,940 | 6,936,286 | 5,825,322 | 1,110,964 |

#### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 7.7 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 7.2 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும் வருட இறுதியில் ரூபா 0.45 மில்லியன் வருமானம் ஒன்றின் சேகரிக்க வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 59 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 300,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,200,000 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

மீளாய்வாண்டின் போது சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (ஆ) சுற்றாடல் சிக்கல்கள்

சபையினால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், சேகரிக்கப்படும் குப்பைகள் ஆரம்பிக்கபட்டிருக்காததுடன், சேகரிக்கப்படும் குப்பைகள் ஆந்தா உல்பத மயான பூமியில் முறையற்ற விதமாக குவிக்கப்பட்டிருந்தது.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

#### (அ) முச்சக்கரவண்டி வாகனத் தரிப்பிடத்திற்காக வாடகை அறவிடப்படாமை.

சபையின் அதிகார பிரதேசத்தில் 2011 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை 13 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் 154 முச்சக்கரவண்டிகளிடம் வருடாந்தம் ரூபா 1,000 கட்டணமொன்று பெற்று பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளின் மூலம் சபையின் வருமானம் ஒன்றினை உழைப்பதற்காக தேவையான துணை விதிகள் ஆக்கப்பட்டு சட்டரீதியாக்கி இருக்கவில்லை.

**(ஆ) ஆந்தா உல்பத வாராந்த சந்தை டெண்டர் பண்ணுதல்**

சபைக்கு சொந்தமான ஆந்தா உல்பத வாராந்த சந்தை ரூபா 131,500 தொகைக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக 2014 ஜனவரி 21 வாடகை கையொப்பமிட்டு உடன்படிக்கை இருந்ததுடன், 2015 ஏப்ரல் 20 திகதி வாடகையாளர் உடன்படிக்கையில் இருந்து விளகியிருந்தார். 2015 ஜுலை 07 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சந்தை வாடகை சபையினால் சேகரிக்கப்பட்டிருந்தமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 333,467 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. சபைத் தீர்மானத்திற்கு பங்களிப்பு செய்திருந்த அனைத்துத் தரப்பினரிடமும் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்யும் படி உள்ளூராட்சி ஆனையாளரின் 2016 ஆகஸ்ட் 18 திகதி அறிவித்திருந்த போதிலும், 2017 திசெம்பர் அளவில் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

**(அ) புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் கடைகளுக்கான உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்காமை**

(i) 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வாடகை, பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு புதிய உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டுமெனினும், சபையின் 2 கடைகள் தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் தற்காலிக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 136,500 இற்கான வருடாந்த வாடகை ஒன்று அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மேலே (i) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க பெறுமதி மதிப்பீடு திணைக்களத்தினால் வாடகை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டுமெனினும், சபைக்கு சொந்தமான 09 கடைகளை சபையினால் வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத முற்பணங்கள்**

2014 ஆண்டின் போது 09 விவசாய அமைப்புக்களுக்கு 15 சந்தர்ப்பங்களில் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 596,835 இற்காக முற்பண வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருக்காததுடன், 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் முற்பணத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகைத்திட்டம்

2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4 ஆவது அத்தியாயத்தில் வழிகாட்டல் கோவையின் 4:2 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைதிட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானங்கள் மற்றும் செலவு உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்த போது 07 வருமான

தலைப்புக்களில் 26 சதவீதம் 100 சதவீதம் வரையான வீச்சு ஒன்றில் மற்றும் 08 செலவு விடயங்களில் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளின் மீதிகள் அட்டவணைகளுடன் இனங்காமை. |
| | | (ii) | பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களின் இலக்கங்களிடையே வித்தியாசங்கள் காணப்படல். |
| | | (iii) | வருமான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஒப்பந்த நிருவாகம் | (i) | வேலைகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங் களுக்காக வழங்கியிருந்த முற்பணங்களை அறவீடு செய்யாமை. |